†

# KAVIN'S EDUCATION STUDY MATERIALS

# TRB SCERT- DIET EXAM - 2016

kavin's 8438487951

# Unit - 9

# Guidance and counseling

**Full Study Material & Model Question Paper and Previous Year Question Paper**

**(2001 - 2015)**

**(PHYSICS SCERT-DIET MATERIAL IS ALSO AVAILABLE )**

**CONTACT : 8144189949, 8438487951**

## TRB PG Previous Year Question

- **Guidance** **Counselling**
- **Mental Health** **Defence Mechanisms**

| | | |
|---|---|---|
| 2001 | | - |
| 2002 - 03 | 1 | 1983 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களன்று அமைதிக் கல்விக்கான முக்கியமான கொள்கைகள் மேற்கொள்ளப்பட்ட இடம்<br>அ) குவாலியர் ஆ) புனே **இ) பிரயாகை** ஈ) வாரணாசி |
| | 2 | தேசிய ஒருமைப்பாட்டின் வரையறை என்பது<br>**அ) நாட்டை ஒருமைப்படுத்தும் நாட்டு மக்களின் சங்கமிக்கும் உணர்ச்சிகள்**<br>ஆ) நாட்டு எல்லையை காப்பது<br>இ) நாட்டுக்காக பிரார்த்தனை செய்வது<br>ஈ) நாட்டுக்காக நன்கொடை செய்வது |
| | 3 | மனநோயை ஹிப்னாடிசம் மூலம் குணப்படுத்தலாம் என்றவர்<br>அ) ஜெரால்டு ஆ) ஹெலன் கெல்லர்<br>**இ) ஃபிராய்டு** ஈ) யுஜின் சான்டவ் |
| 2003 - 04 | 1 | ஒன்றுடன் ஒன்றி பொருந்திவராத இரண்டு ஊக்கிகளின் வெளிப்பாட்டை கூறுவது<br>அ) நரம்பு கோளாறு ஆ) மனோவியாதி<br>இ) அடக்கு முறை **ஈ) மனப்போராட்டம்** |
| 2004 - 05 | 1 | ஏமாற்றும் குணமுடைய ஒருவன் பிறரும் ஏமாற்றியுள்ளனர் எனக் கூறுவதில் உள்ள தற்காப்பு நடத்தை<br>**அ) எறிவு (அ) முனைப்பு** ஆ) அறிவார்ந்த விளக்கம்<br>இ) குறிப்பிடுதல் ஈ) ஈடுசெய்தல் |
| 2005 - 06 | | - |
| 2006-07 | 1 | நேரடி அறிவுரை பகர்தல் முறையில் திறம் வாய்ந்த மனவியலாளர்<br>அ) வைகெட்ஸ்கி ஆ) தார்ன்<br>இ) ரோஜர்ஸ் **ஈ) வில்லியம்சன்** |
| 2007-08 | 1 | தற்காப்பு நடத்தையில் பலிகடா ஆக்கப்படுதல் என்பது பின்வருவனவற்றில் உதாரணமாகும்<br>**அ) இடமாற்றம்** ஆ) புறத்தெறிதல்<br>இ) பின்வாங்குதல் ஈ) அடக்குதல் |
| TRB AEEO | | |
| 2009-10 | 1 | சுமரச முறை அறிவுரை பகர்தல் முறையை அறிமுகம் செய்தவர்<br>அ) கார்ல் ரோஜர்ஸ் ஆ) ஹேயட்<br>இ) ஜே.ஜோன்ஸ் **ஈ) எப்.சி.தார்ன்** |
| TRB BT SSA | | |
| 2010 | | - |
| TRB PG | | |
| 2011-12 | | - |
| 2012-13 | 1 | இரண்டு எதிரிடையான இலக்குகளுக்கிடையே ஏற்படும் மனர்போராட்டம்<br>**அ) விலகு- விலகு** ஆ) விலகு - அணுகு<br>இ) அணுகு – அணுகு ஈ) எதுவுமில்லை |
| | 2 | தற்காப்பு நடத்தை அல்லாதது எது<br>அ) காரணம் கற்பித்தல் ஆ) ஈடுசெய்தல்<br>இ) புறத்தெறிதல் **ஈ) மனப்போராட்டம்** |
| 2014 - 15 | | - |

kavins 8438487951

-------------

**Unit-9-Guidance & Counselling**

- **Guidance** - வழிகாட்டல்
    - **Concept of guidance –** வழிகாட்டலின் கருத்து
    - **Definitions of guidance –** வழிகாட்டலின் வரையறை
    - **Needs of guidance** - வழிகாட்டலின் தேவை
- **Counselling –** அறிவுரைப் பகர்தல்
    - **Concept of counseling –** அறிவுரைப் பகர்தலின் கருத்து
    - **Definitions of counseling –** அறிவுரைப் பகர்தலின் வரையறை
    - **Needs of counseling** - அறிவுரைப் பகர்தலின் தேவை
- **Kinds of guidance** - வழிகாட்டலின் வகைகள்
    - **Personal –** தனி வழிகாட்டல்
    - **Familial** - சமூக வழிகாட்டல்
    - **Academic** - கல்வி வழிகாட்டல்
    - **Vocational –** தொழில் வழிகாட்டல்
- **Types of counselling –** அறிவுரை பகர்தலின் வகைகள்
    - **Group** - குழு அறிவுரை பகர்தல்
    - **Individual –** தனிநபர் அறிவுரை பகர்தல்
- **Importance of Aptitude test in Academic and Vocational guidance –** கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலின் நாட்டச்சோதனையின் முக்கியத்துவம்
- **Mental Health –** மனநலம்
- **Defence Mechanisms. –** தற்காப்பு நடத்தைகள்

Arvin's 8438487951

**வழிகாட்டல் (Guidance) மற்றும் அறிவுரை பகர்தல் (Counseling)**

இன்றைய கல்விச் சூழலில் ஆசிரியர்கள் மாணவர்களின் ஆளுமை வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முழுவளர்ச்சியை பெற வழிகாட்டுதலும் மற்றும் அறிவுரை பகர்தலும் தேவையாகிறது.

**பொருள் (Meaning)**

ஒரு தனிமனிதன் மற்றொரு தனிமனிதனுக்கு, அவனது உடல் மற்றும் சமூகச்சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், சமுதாயத்தில் சிறப்பாக வாழ்வதற்கும் தரும் உதவிக்கு வழிகாட்டல் என்று பெயர்.

## வரையறை (Definitions)

| | |
|---|---|
| கெல்லி (Kelly) | "மாணவர்களை முழு வளர்ச்சி அடையச் செய்யும் செயலே வழிகாட்டல்" என கூறுகிறார். |
| ஹம்ப்ரீஸ் மற்றும் டிரெக்ஸ்லர் | "வழிகாட்டல் என்பது ஒரு தனிமனிதன் எந்தநிலையிலும் அவனுடைய அறிவு வளர்ச்சிக்கும், சுய வேகத்திற்கும் சமூக மற்றும் மனவெழுச்சி திறுனுக்கும் ஏற்றவாறு கொடுக்கப்படும் சுய உதவியே ஆகும்." |
| ரூத் ஸ்டிராங் (Ruth Strang): | வழிகாட்டல் என்பது ஒரு தனிமனிதனின் மகிழ்ச்சி, சமூக பயன்பாடு இவற்றின் பொருட்டு அவனுடைய வளர்ச்சி நிலைகளில் அவனுடைய சொந்த முயற்சிகளின் மூலமாக உதவும் செயல்பாடு ஆகும். |
| ஆலிஸ் குரோ மற்றும் லெஸ்டர் குரோ: | "எல்லா வழிகாட்டலின் அடிப்படைக் கருத்து வழிகாட்டல் திறமை பெற்றவர். மற்றொருவருக்கு, வாழ்க்கை வளம்பெற தக்கதொரு முடிவு எடுக்க உதவி செய்வார். அம்முடிவுகளைச் செயல்படுத்த உதவுவார்." |
| கிட்சன்: | வழிகாட்டுதல் என்பது தனிநபர் கல்வி முறையாகும். அனைத்து நிலைகளிலும் ஒவ்வொரு மாணவனையும் அதிகபட்ச வளர்ச்சி நிலைக்குத் தன்னைத்தானே உயர்த்திக்கொள்ள உதவுவதாகும் என்கிறார். |
| ஆர்தர் ஜெ.ஜோன்ஸ்: | ஒருவனுடைய வாழ்க்கையை முழுமையாக கருதி, வழிகாட்டல் என்பது அவனுடைய தேவை இயல்பான ஆற்றலை மதிப்பிடல், வாழ்க்கையின் இலக்குகளை வளர்த்தல் போன்றவைகளுக்கு உதவுகின்றன. இந்த இலக்குகளை அடைவதில் திட்டம் உருவாக்கல், அதன் வழியே அவ்விலக்குகளை அடைதல் போன்றவைகளுக்கு உதவுகின்றன. இந்த இலக்குகளை அடைவதில் திட்டம் உருவாக்கல், அதன் வழியே அவ்விலக்கினை அடைதல் போன்றவைகளுக்கு வழிகாட்டல் தனிப்பட்ட திருப்தியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயம் விரும்பக்கூடியதற்கும் உதவுகின்றது என்று கூறுகிறார். |
| மேத்யூசன்: | "மாணவர் ஒவ்வொருவரும் தனது குணங்களையும் திறன்களையும் முறையாக கண்டறிந்து புரிந்து அவற்றை முழுமையாக சமூக தேவைகளுக்கேற்பவும் வாய்ப்பிற்கேற்பவும் பயன்படுத்துவது ஆகும். |
| குட்: | "வழிகாட்டுதல் என்பது தனிநபரின் மனப்பான்மைகளையும் அதனைச் சார்ந்த நடத்தைகளையும் மாற்றியமைக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட தனிமனித உறவுமுறை சார்ந்த செயல்பாடாகும்." |
| ஹேயிட்: | வழிகாட்டல் என்பது மாணவர் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு பணிகளின் தொகுப்பே வழிகாட்டல் எனப்படும். |
| நாப்ஸ் | துனிப்பட்ட மாணவர்களை பற்றி கற்றல், அவனுக்கு அவனைப் பற்றி புரிந்துக்கொள்ள உதவுதல், அவனிடம் ஏற்படும் மாறுதல்கள், அவனது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவும் சூழ்நிலைகள் பற்றிய விழிப்புணர்வும் வழிகாட்டலின் தன்மைகளாகும். |
| கூஸ்கே.ஃபவர் | வழிகாட்டல் என்பது இருநிலைகளை உடையது. 1. வழங்கல் நிலை இதன் மூலம் மாணவர்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு தேவையான வழிகாட்டல வழங்கப்படுகிறது. 2. அனுசரிக்கும் நிலை இதன் மூலம் மாணவர்கள் அவருக்கு கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப அனுசரித்து நடக்கும் பயிற்சியை வழிகாட்டல என்கிறோம். |

kavin's 8438487951

| | |
|---|---|
| **புராக்டர்** | வழிகாட்டல் என்பது தனிநபர் அல்லது தனிநபர்களை கொண்ட குழுக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை அனுசரித்து நடக்க பள்ளியின் உள்ளேயும் வெளியேயும் பயிற்சி அளித்தல் ஆகும். |

**வழிகாட்டுதலின் தேவைகள் (Needs)**

போட்டி மனப்பான்மை மற்றும் சிக்கலான சமுதாயத்தில் மாறிவரும் அறிவியல், அரசியல், பொருளாதார இன்னும் பல சூழ்நிலைகளில் மனிதர்களுக்கு வழிகாட்டல் தேவைப்படுகிறது. இதைப்பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ❖ சிக்கலான சமுதாயம்
- ❖ தனியாள் வேற்றுமை
- ❖ தனியாளின் மனநிலை
- ❖ கல்வி மற்றும் தொழில் அமைப்புகளில் மாற்றம்
- ❖ பொருளாதார அமைப்பில் மாற்றம்
- ❖ மனித ஆற்றலைப் பயன்படுத்துதல்
- ❖ ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல்
- ❖ நெறிபிறழ்வு குழந்தைகள்
- ❖ நாட்டின் மக்கள் தொகை பெருக்கம்

**வழிகாட்டுதலின் அடிப்படைக் கருத்துக்கள் / கொள்கைகள் (Principles of Guidance)**

- ❖ வழிகாட்டல் ஒரு மெதுவான வளர்ச்சியைக் கொண்டதாகும்.
- ❖ வழிகாட்டுதல் ஒரு தொடர்ச்சியான செயல்பாடாகும்.
- ❖ பிரச்சனைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையது.
- ❖ இது உட்காட்சியை வளர்ச்சியடையச் செய்கிறது.
- ❖ தனியாள் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள்
- ❖ வழிகாட்டல் தனியாள் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ வழிகாட்டல் ஒரு திட்டமிட்ட சேவை.
- ❖ வழிகாட்டல் அனைவருக்கும் பொதுவானது.

kavin's 8438487951

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

## வழிகாட்டலின் வகைகள் (Kinds of Guidance)

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. தனிப்பட்ட வழிகாட்டல்
4. சமூக வழிகாட்டல்.

### 1. கல்வி வழிகாட்டல்:

| | |
|---|---|
| **ஆர்தர்.ஜெ. ஜோன்ஸ் (Arthur. J.Jones)** | பள்ளி பாடத்திட்டத்திலும், பள்ளி செயல்பாடுகளிலும் மாணவர்களுக்கு உதவி புரிந்து அவர்களுடைய கல்வி தொடர்புடைய தெரிவுகளையும், இணக்கங்களையும், மேம்படுத்த உதவுதல் கல்வி வழிகாட்டல் ஆகும். |
| **ரூத் ஸ்டிரேங் (Ruth Strang)** | ஒருவன் தனக்கேற்ற திட்டத்தை, செயல்களைத் தேர்ந்தெடுக்க உதவுதல் கல்வி வழிகாட்டல் ஆகும். |

- ஆர்வம், திறன், பொருளாதார நிலைக்கேற்ப பாடங்களை தேர்ந்தெடுக்கவும்.
- பள்ளியில் பொருத்தப்பாட்டுடன் நடந்து கொள்ளவும்.
- படிக்கும் ஆற்றலை மாணவர்களிடம் வளர்த்திடவும்.
- பல்துறை அறிவு பெறவும்
- மாணவன் தன் எதிர்காலத்திற்குத் திட்டமிடும்பொழுதும்
- பள்ளிப்பாடங்களில் அவனுடைய அடைவு குறையும் பொழுதும்
- விரும்பத்தகாத நடத்தைகள் (அ) இணக்கமற்ற பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கும் பொழுது.

kavin's 8438487951

### 2. தொழில் வழிகாட்டல்

| | |
|---|---|
| **மையர்ஸ் (Myers):** | தொழில் வழிகாட்டல் என்பது மனித வளத்தை பயனள்ள முறையில் பயன்படுத்தி அதனால் அவனுக்கு தொழிலில் வெற்றியும், திருப்தியும் ஏற்படுகிறது. சமுதாயத்திற்கும் நலன் பயக்கிறது. |
| **டொனால்டு இ.சூப்பர் (Donald. E. Super).** | தொழில் வழிகாட்டல் என்பது ஒருவன் தன்னைப்பற்றியும், ஒரு தொழிலில் தனது பங்கு பற்றியும் அறிந்துகொள்ள உதவுவதாகும். |



www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

- தொழிலைத் தேர்ந்ததெடுப்பதில்
- தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான தொழிலுக்கான தயார்படுத்துதலில்
- வேலையில் ஒத்துப்போதல் (ம) வேலையில் வளர்ச்சியை ஏற்படுத்துதலில்
- பொருளாதாக ரீதியாக முன்னேறவும்.

**3) தனிப்பட்ட வழிகாட்டல்:**

வில்சன் (Wilson) தனிப்பட்ட வழிகாட்டல் என்பது ஒருவரது உடல், உணர்வு, சமூக வளர்ச்சி, நல்லொழுக்கம் மற்றும் இணக்கம் ஆகியவற்றை மேம்படுத்த உதவுவதேயாகும்.

மில் (Mill)

தனிப்பட்ட வழிகாட்டல், ஒருவரது புலன் உணர்வுகளுக்கும், புற வாழ்க்கைச் சூழலுக்கும் இடையே ஏற்படும் பரிமாற்றத்தில் செயல்படுவதாகும்.

1960 – 61 ஆம் ஆண்டு அனைத்திந்திய கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சங்கம் இந்தியாவில் 17 பல்கலைக்கழகங்களில் மூவாயிரம் மாணவர்களை ஆய்வு செய்து கீழ்க்கண்ட பொதுவான பிரச்சனைகள் எவை எவை என கண்டறிந்தது.

1) மற்றவர்கள் நிறைய எதிர்பார்ப்புகளை என்னிடமிருந்து எதிர்பார்த்தாலும் என்னால் படிப்பில் சிறப்பாக செய்ய முடியவில்லை.

2) என்னென்ன தொழில்களுக்கு என்னென்ன கல்வித் தகுதிகள் தேவை என்பது பற்றி எனக்குத் தெரியாது.

3) என் படிப்பு முடிந்தவுடன் என் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

4) முறையான வழிகளில் படிப்பது எப்படி என்று எனக்குத் தெரியவில்லை.

5) என்னுடைய தவறுகளை நான் மறப்பதற்கு மிகவும் கஷ்டபடுகிறேன்.

6) குறித்த நேரத்தில் என்னால் வேகமாக படித்து முடிக்க இயலவில்லை.

இதைத்தவிர, தனியாள் அவனுடைய உடல், மனவெழுச்சி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் நடத்தைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவும் வகையில் தனிப்பட்ட வழிகாட்டல் உதவி செய்கின்றது.

**4. சமூக வழிகாட்டல்:**

சமூக மதிப்புகள், வாழ்க்கைத் தத்துவங்கள் மற்றும் தனிமனிதர்களுக்கிடையேயான தொடர்புகள் போன்ற பல்வேறு சமூக பண்புகளை மாணவர்களிடம் வளர்க்க உதவுவது சமூக வழிகாட்டல் என்று பெயர்.

- நல்ல குடிமகனாக திகழ்வதற்கும்

kavin's 8438487951

- ❖ சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கும்
- ❖ மனித வளங்களை பாதுகாத்துப் பயன்படுத்துவதற்கும்
- ❖ ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும், சமூக வழிகாட்டல் தேவைப்படுகிறது

**வழிகாட்டலை வகைப்படுத்துதல்**

**வழிகாட்டலை பலவிதமான வல்லுநர்கள் பல வகைகளாகப் பிரித்துள்ளனர். அவற்றில் சில!**

1. பிராக்டரின் வகைப்படுத்தல்
2. ப்ரூயர்ஸ் வகைப்படுத்தல்
3. பேட்டர்சன்ஸ் வகைப்படுத்தல்
4. கூவ் கே.்.பாவர்ஸ் வகைப்படுத்தல்
5. மையர்ஸ் வகைப்படுத்தல்

**பிராக்டரின் வகைப்படுத்துதல்:**

1. தொழில் வழிகாட்டல்
2. கல்வி வழிகாட்டல்
3. சமூக செயல்களில் வழிகாட்டல்
4. பண்புகளை உருவாக்கும் செயல்களில் வழிகாட்டல்
5. உடல் ஆரோக்கியம் மற்றும் உடற்கூறு தொடர்பான செயல்களில் வழிகாட்டல்
6. ஓய்வு நேரத்தைப் பயனள்ளதாகக் கழிக்க வழிகாட்டல் இவற்றில் தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி வழிகாட்டல் மிகவும் புகழ்பெற்றவை. ஏனைய நான்கும் சமூக நோக்கில் பயனுள்ளவை.

**ப்ரூயர்ஸ் வகைப்படுத்தல்**

ஜான் ஆ.ப்ரூயர்ஸ் தனது ‘கல்வி வழிகாட்டல்’ என்ற நூலின் வழிகாட்டலை 10 வகையாக வழிப்படுத்தியுள்ளார். அவையாவன:

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. மத வழிகாட்டல்

kavin's 8438487951

4. இல்லத்திலுள்ளோரிடையே நல்லிணக்கம் ஏற்பட வழிகாட்டல்
5. குடிமைப் பயிற்சி வழிகாட்டல்
6. ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான வழிகாட்டல்
7. தனிப்பட்ட நலன் கருதி வழிகாட்டல்
8. சரியான செயல்களில் வழிகாட்டல்
9. ஒத்துழைப்பு மற்றும் எண்ணித் துணிதல் போன்றவற்றிற்கு வழிகாட்டல்
10. கலாச்சார செயல்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்

**ப்ரூவரின் வழிகாட்டல் வகைப்படுத்துதல் நான்கு தலைப்பின் கீழ்வரும். அவையாவன:**

அ) கல்வி வழிகாட்டல்

ஆ) தொழில் வழிகாட்டல்

இ) தனிநபர் வழிகாட்டல்

ஈ) சமூக வழிகாட்டல்

**பேட்டர்சன்ஸ் வகைப்படுத்துதல்**

இவர் ஐந்து வகைப்படுத்துகிறார். அவையாவன:

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. தனிப்பட்ட வழிகாட்டல்
4. சிக்கன வழிகாட்டல்
5. ஆரோக்கிய வழிகாட்டல்

**கூ.:ப், கே.:பாவர்ஸ் வகைப்படுத்தல்**

இது ஐந்து வகைப்படும். அவையாவன:

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. பொழுது போக்கு வழிகாட்டல்
4. ஆரோக்கிய வழிகாட்டல்

kavin's 8438487951

5. குடிமை சமூக நற்பண்பு வழிகாட்டல்

**மையர்ஸ் வகைப்படுத்தல்**

இது எட்டு வகைப்படும். அவையாவன

1. கல்வி வழிகாட்டல்
2. தொழில் வழிகாட்டல்
3. ஆரோக்கிய வழிகாட்டல்
4. சமுதாய நற்பண்பு வழிகாட்டல்
5. குடிமை வழிகாட்டல்
6. சமுதாய சேவை வழிகாட்டல்
7. பொழுது போக்கு வழிகாட்டல்
8. தலைமைப் பண்பு வழிகாட்டல்

இவை தவிர, அலகாபாத்திலுள்ள உளவியல் அமைப்பு வழிகாட்டலை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது.

அ) கல்வி வழிகாட்டல்

ஆ) தொழில் வழிகாட்டல்

இ) தனிப்பட்ட வழிகாட்டல்

ஈ) குழு வழிகாட்டல்

Kavin's 8438487951

**Important Points:**

- வழிகாட்டுதல் சேவை இந்தியாவில் முதன் முதலில் கொல்கத்தா பல்கலைக் கழகத்தல் துவங்கியது. 1915 ல் முதல் உளவியல் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1936 ல் பயன்பாடு உளவியல் துறை தனித்துறையாக நிறுவப்பட்டது.
- 1941-ல் கொல்கத்தாவில் பாட்லிபாய் என்பரால் தொழில் வழிகாட்டுதல் அலுவலுகம் நிறுவப்பட்டது.
- 1945-ம் ஆண்டு இந்தியாவில் பாட்னா பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட வழிகாட்டல் துறை வழிகாட்டுதல் இலக்கத்திற்கு புதிய தூண்டலைக் கொடுப்பதாக அமைந்தது.

- 1947 ல் தொழிலில் வழிகாட்டலுக்கு என்று பத்திரிகையை ஏற்படுத்தியது. பார்சி இனமக்கள் இதனால் பயன்பெற்றனர். மேலும் அலகாபாத்தில் ஓர் உளவியல் அலுவலகம் உத்திரப் பிரதேச அரசு அமைத்தது.
- 1950 ல் மும்பை அரசு தொழில் வழிகாட்டும் அமைப்பை நிறுவியது.
- 1954 ல் மத்தியக் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதல் அமைப்பு பதினாறு மாநிலங்களில் நிறுவப்பட்டது.
- 1962 ல் மத்தியப் பொருளாதாரத் துறை உதவியுடன் மாநிலக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் பதினாறு இடங்களில் வழிகாட்டுதல சேவை விரிவாக்கம் செய்யப்பட்டது.
- E.C. Rober தனது “பள்ளி அறிவுரை பகர்பவர்” என்ற நூலில் அறிவுரை பகர்பவரின் நன்னெறிக் கொள்கைகளைப் பற்றி கூறியுள்ளார்.
- வழி காட்டுபவர் அத்துறையில் புலமை பெற்றவராகவும், பிறரைக் கவர்ந்திழுப்பவராகவும், பிறரது நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும் என ஸ்டிரேங் கூறுகின்றார்.
- E.G. நாமாராவ் என்பவர் டெல்லி மேல்நிலைப் பள்ளிகளுக்கான வழிகாட்டல் திட்டம் ஒன்றை தயாரித்தார்.
- மனநலவில் என்ற சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர் – வில்லியம் கானல்.
- 1950 அரசு தொழில் வழிகாட்டும் அமைப்பு மும்பையில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.
- மாணவர் அறிவுரை பகர்தலின் பயிற்சிகளும் பண்புகளும் என்று நூலை எழுதியவர் – R.B. ராபின்சன்
- சமூகமான நட்புறவு வளர்வதற்கான வழிமுறைகளை தந்தவர் – ராபின்சன் (ம) டேவிஸ்
- அறிவுரை பகர்தல் எப்போது தேவைப்படுகிறது என்ற வழிமுறைகளை குறிப்பிட்டவர் – செல்வி. பிராக்தன்
- வழிகாட்டுதலின் இதயம் - அறிவுரை பகர்தல்
- அறிவுரை பகர்தலின் இதயம் - நேர்காணல்
- அறிவுரை பகர்தல் பண்புகள் பற்றி கூறியவர் -- பீட்டர்சன் .

**பேக்கர் மெஹ்தி**

இவர் தனது “Guidance in Schools 1978” என்ற நூலில் வழிகாட்டலின் இயல்பை குறிப்பிட்டுள்ளார்.

kavin's 8438487951

## அறிவுரை பகர்தல் (Counselling)

### பொருள்: Meaning

- அறிவுரை பகர்தலானது அறிவுரை கூறுபவருக்கும், அறிவுரை பெறுபவருக்கும் இடையே நிகழும் நேரடி உரையாடலை குறிக்கின்றது.
- தீவிர பிரச்சனைக்கு உட்பட்டவருக்கு சிறப்பு பயிற்சி பெற்றவரால் நேருக்கு நேர், தனித்த சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் வழிகாட்டுதலே அறிவுரை பகர்தல் எனப்படும்.
- வழிகாட்டுதலின் இதயம் அறிவுரை பகர்தலாகும்.

### வரையறைகள்:

| | |
|---|---|
| **மையர்ஸ் (Myers)** | என்பவரின் கூற்றுப்படி, அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவருக்கு உதவி செய்யும் வகையில் அமைந்த ஒரு தொடர்புமுறை ஆகும் என்று கூறுகிறார். |
| **ஆர்பெக்கில்(Arbuckle)** | அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரை மையமாக கொண்டு செயல்பட வேண்டும். |
| **ஸ்மித் ((Smith)** | என்பவரின் கூற்றுப்படி, அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை அளிக்கப்பட வேண்டியவர். அறிவுரை பெறுபவர் விரும்பியவற்றை தேர்ந்தெடுத்தல், திட்டமிடுதல் அல்லது ஒத்துப்போகுதல் போன்றவை தொடர்பான விளக்கங்களையும் உண்மைகளையும் கண்டுகொள்ள உதவு ஒரு செயல் ஆகும். |
| **ரோஜர் (1942)** | என்பவரின் கூற்றுப்படி, ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் இடையே நிலவும் நன்கு வடிவமைக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க உறவினைக் குறிக்கிறது. இவ்வளவு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சூழலில் ஆலோசனை பெறுபவரை ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வைக்கிறது. அந்த அளவுக்கு அவர் தன்னை புரிந்து கொள்ள வகை செய்கிறது. |
| **ரோஜர் (1952)** | (1952) கூற்றுப்படி, ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் உள்ள தொடர்பு சீராக இருக்கவும், ஆலோசனை பெறுபவர் ஒரு காலத்தில் பெற முடியாத அனுபவங்களை இப்போது பெறவும் ஒருங்கிணைந்து முழு மனிதராக மாறவும் இம்முறை துணை புரிகிறது. |
| **பெப்பின்ஸ்டை மற்றும் பெப்பின்ஸ்கை** | (1954) கூற்றுப்படி, ஆலோசனை பகருபவருக்கும், ஆலோசனை பெறுபவருக்கும் இடையே தொழில் ரீதியான சூழலில் நடைபெறும் சொல்லாடலே ஆலோசனை பகர்தல் ஆகும். இச்சொல்லாடலைத் தொடங்கிப் பேணுவதால் ஆலோசனை பெறுபவரின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. |

kavin's 8438487951

| | |
|---|---|
| **மேக்லீன் (1955)** | கூற்றுப்படி தானாகத் தீர்த்துக் கொள்ள முடியாத பிரச்சனைகளையுடைய ஒருவருக்கும் பலவேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மற்றவருக்கு உதவும் அனுபவமும் பயிற்சியும் பெற்ற தொழில்சார் பணியாளர் ஒருவருக்கும் இடையே நிகழும் உறவு சார்ந்த செயல்முறையே ஆலோசனை பகர்தல் எனப்படுகிறது. |
| **டால்பார்ட்:** | அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவர் ஆகியோரிடையே நேர்முகத் தொடர்பு ஏற்படுகிறது.இதன் மூலம் அறிவுரை பெறுபவர் தற்போதைய சூழ்நிலையையும் வினையக் கூடிய எதிர்கால சூழ்நிலையையும் உணரச்செய்து தன்னுடைய இயல்திறன்களையும், ஆற்றல்களையும் சமூகத்திற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்தி மன நிறையுள்ள வாழ்க்கை வாழவும் தனது பிரச்சனைகளையும் தீர்த்துக்கொள்ள உதவும். |
| **Webster Dictionary** | Counselling is consultation mutual interchange of opinions deliberating together என்று வரையறுக்கப்படுகிறது. |
| **புளோசர்** | ஆலோசனை வழங்கல் வெவ்வேறாக வரையறுக்கப்பட்டாலும் பிரச்சனைக்கு உட்படுபவர் பிரச்சனையிலிருந்து வெளிவர அனுபவமுள்ளவரின் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெறுதல் என்பதே அடிப்படை ஆகும். |
| **ஸ்டெபிர்** | ஸ்பெபிர் என்பவர் அறிவுரை பகர்தல் என்பது கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் பங்கேற்புக்கு ஒப்பிடுகிறார். ஆலோசனை வழங்கல் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் கூடிய உறவினைக் குறிப்பதாகும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நம்பிக்கை கொண்ட ஒருவரிடம் பெறும் கருத்துப் பரிமாற்றம் ஆலோசகைகளாகும் |

**அறிவுரை பகர்தலுக்கான தேவைகள்: (Need for Counseling)**

**1)** தனது பிரச்சணைகளைப் புரிந்து கொண்டு, தீர்க்கும் வழிமுறைகளை அறிந்து கொள்ள முடிகிறது.

2) தனது நிறை, குறைகளை அறிந்து கொண்டு திறமைக்கேற்ற குறிக்கோளை அடைய முடிகிறது.

3) சரியாக திட்டமிட்டு, குறிக்கோளை அடைய முடிகிறது.

தனிநபர்களுடைய குறைபாடுகள், பிரச்சனைகளைக் கண்டறியவும், அவர்களுக்கு உதவ வேண்டும், பிரச்சணைகளை தீர்க்க வேண்டும் என்ற நிலையிலும்,

தனிநபர் தனக்கு யாராவது உதவினால் நல்லது என்ற உணர்வுடன் இருக்கும் போதும், உணர்வுகளை வெளிக்கொணரவும், தவறுகளை விரிவாக சுட்டிக்காட்டிடவும்,அவர்களின் தனிப்பட்ட திறன்களை உணரச் செய்யவும், உள்ளுணர்வுகளை வளரச் செய்யவும், திட்டமிட்டு செயலாற்றச் செய்யவும், அறிவுரை பகர்தல் தேவைப்படுகிறது.

kavin's 8438487951

**அறிவுரை பகர்தலின் பண்புகள் (Importance of Counselling)**

- ❖ அறிவுரை பகர்பவனுக்கும், அறிவுரை பெறுபவருக்கும், இடையே தனித்த நேர்முகத் தொடர்பு ஏற்படுதல்.
- ❖ வளர்ச்சி சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் வண்ணம், அறிவுரை பெறுபவர் தன் நிறைகுறைகளை உணரச் செய்தல்.
- ❖ தன் இயல்திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும் சமூகத்திலும், உகந்த வகையில் அறிவுரை பெறுபவனை பயன்படுத்தச் செய்தல்.
- ❖ இது ஒரு தொழில்முறை பணி
- ❖ அறிவுரை பகர்தலின் உடனடி நோக்கம், அறிவுரை பெறுபவர் தன்னுடைய தற்போதைய பிரச்சணையைத் தானே தீர்த்துக்கொள்ள உதவுதல், எதிர்காலத்தில் தனது பிரச்சனைகளைத் தானே தீர்த்துக் கொள்ளும் ஆற்றலை உருவாக்கிடல், அதற்கு அடுத்த நோக்கமாகும்.
- ❖ அறிவுரை பகர்தலில், அறிவுரை பெறுபவனிடம் ஆளுமை மாற்றத்தை விரும்பத்தக்க வகையில் ஏற்படுத்துகிறது. அறிவுரை பெறுபவர் தன்னைப்பற்றி முழுமையாக உணர்ந்து கொள்ள உதவி அளிக்கப்படுகிறது.
- ❖ அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரிடம் கற்றல் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.
- ❖ அறிவுரை பகர்தல் என்பது

1) உபதேசம் செய்வதல்ல

2) சமாதானப்படுத்துவதோ, வற்புறுத்துவதோ அல்ல

3) விசாரணை செய்வதல்ல

4) உளப்பகுப்பாய்வு முறையும் அல்ல.

**அறிவுரை பகர்வரின் பண்புகள்**

**Haimin and Paulsen (1950) என்ற ஆலோசகர்கள் கருத்தின் படி,**

1. இரக்கமனப்பான்மை
2. புரிந்துகொள்ளும் திறன்
3. நட்பு ரீதியான அணுகுமுறை
4. நயம்பட உரைக்கும் உணர்வு
5. நிலைத்த தன்மை

Kavin's 8438487951

6. பொறுமை
7. நோக்க அடிப்படை
8. நேர்மை, சமநிலை, சார்பற்ற நிலை
9. சகிப்புத் தன்மை, அமைதி
10. பரந்த எண்ணம், மிகழ்ச்சியான நிலை
11. சமுதாய நுண்ணறிவு

போன்றன சிறந்த தரமான ஆலோசகருக்கான பண்புகளாகக் கூறுகின்றனர்.

**ஷர்டில் கூற்றுப்படி அறிவுரை பகர்பவரின் செயல்கள்:**

1. உளவியல் தேர்வு வைத்தல்
2. தொழில் மற்றும் கல்வி தகவல்களைப் பரப்புவதற்கு ஒருங்கிணைத்தல்
3. நேர்முகத் தேர்வு நடத்தல்
4. கல்வி மற்றும் தொழில் வழிக்காட்டலை அளித்தல்
5. பணிக்கு ஆள் அமர்த்தும் சேவையை நடத்துதல்
6. ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
7. குழு வழிகாட்டல் நடத்துதல்
8. பயிற்சி
9. அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளல்

நேர்காணல், தேர்வு, கதை எழுதுதல், சுயசரிதை, வாழ்க்கை வரலாறு (பெரியோர் மற்றும் சிறியோர்) போன்றவற்றில் உள்ள தகவலைச் சேகரித்து பகுத்தாய வேண்டும். இதன் மூலம் தீர்வுகள் காண வேண்டும். குழுவழிகாட்டல், கருத்தரங்குகள் மூலமாக வழிகாட்டலை நடத்தி அறிவுரை பகர்பவர் சரியாக ஈடுபட வேண்டும். தொடப்பணி இருக்க வேண்டும்.

kavin's 8438487951

**நியூசம் அறிவுரை பகர்தலின் படிநிலைகள் :**

நியூசம் (Newsom) அறிவுரை பகர்தலின் படிநிலைகளை வரிசைபடுத்தியுள்ளார்

- தன்னிடம் வருபவரிடம் மனநெருக்கம் ஏற்படுத்திக் கொள்வது
- உதவி அளிக்கப்படும் சூழ்நிலையை உருவாக்குதல்

- எதிர்மறை மனப்பான்மைகளையும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தவும் உதவுதல்
- பிரச்சனையை தீர்க்க சாதக பாதகங்களை தெளிவுபடுத்துதல்
- தீர்வினை தேர்வு செய்ய உதவுதல்
- புதிய இலக்குகளை அமைத்தல்
- தன்னம்பிக்கை வளர்த்தல் முடிவுகளை எடுக்கும் ஆற்றலைப் பெறுதல்
- பின் தொடர்பணி
- அறிவுரை பகர்தலை நிறுத்துவது.

**அறிவுரை பகர்தலின் வகைகள் : ( Type of counselling )**

1. **நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் : (Directive counselling)**
2. **தன்னெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்: (Non – Directive counselling)**
3. **பொதுநிலை அறிவு பகர்தல் : (Eclectic counselling)**

**1. நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்: (நேரடி அறிவுரை பகர்தல்)**

- ❖ நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் அறிவுரை பகர்பவரை மையமாகக் கொண்ட அறிவுரை பகர்தல் ஆகும்.
- ❖ இம்முறையை E.G வில்லியம்சன் தோற்றுவித்தார்.
- ❖ ஆர்பெக்கில் என்பவரின் கூற்றுப்படி நெறிப்படுத்தும் அறிவுரைபகர்தல் என்பது எவ்வாறு பிரச்சனைகளை தீர்ப்பது என்று அறிவுரை பெறுபவர் கற்றுக்கொள்ள உதவுவது ஆகும்.

**நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தலின் படிகள்:**

**E.G. வில்லியம்சனின் ஆறுபடிகள்**

1. பகுத்தறிதல்.
2. தொகுத்தறிதல்
3. குறையறிதல்
4. வருவதுரைத்தல்
5. அறிவுரை பகர்தல்
6. தொடர்செயல்



kavin's 8438487951

**குறைகள்:**

- சர்வாதிகார முறை.
- அறிவுரை பெறுபவர் தன்னிச்சையாக செயல்பட இயலாது.
- அறிவுரை பெறுபவரிடம் புதிய கற்றல் ஏதும் ஏற்பட்டு வளர்ச்சிக் கூறுகள் தோன்றிட வாய்ப்பில்லை.
- இளம் சிறார்களுக்குமே, தீவிர நடத்தைக் கோளாறு ஏற்பட்டு உள்ளவர்களுக்கு மட்டும் அதிகம்.

**2. தன்னெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்:**

- ❖ அறிவுரை பெறுபவரை மையமாகக் கொண்டு முறையாகும்.
- ❖ கார்ல், ஆர். ரோஜர்ஸ் இம்முறையை தோற்றுவித்தார்.
- ❖ அறிவுரை பெறுபவர் தன்னைப்பற்றி நன்கு புரிந்துகொள்ள அறிவுரை பகர்பவரை அனுமதிக்க வேண்டும்.
- ❖ இத்தகைய அறிவுரை பகர்தலை வளர்ச்சிசார் செயல்கள் என அழைக்கிறோம்.
- ❖ இம்முறை அறிவுரை பெறுபவரை மையமாகக் கொண்டு செயல்படக்கூடியது.
- ❖ இம்முறை மறைமுக அறிவுரை பகர்தல் என்றும், நெறிசாரா அறிவுரை பகர்தல் என்றும் அழைக்கப்படுகிறது.

**குறைகள்:**

- கால விரயம்.
- இளம் சிறார், தவிர நடத்தைக் கோளாறு உடையவர்கள், நுண்ணறிவுக் கோளாறு உள்ளவர்களுக்கு ஏற்றது அல்ல
- அறிவுரை அளிப்பவரின் குறைவான பங்கீடு அறிவுரை பெறுபவரிடம் மனச்சலிப்பை உண்டாகிறது.

**3. பொதுநிலை அறிவுரை பகர்தல்:**

- ❖ சமரச முறை என அழைக்கப்படுகிறது.
- ❖ நெறிப்படுத்தப்பட்ட முறையில் செயல்படுவதைப் போல், அறிவுரை பகர்பவர் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அதே சமயத்தில் நெறிசாரா முறையில் அதிகம் செயல்படாமலிருந்து ஊக்குவித்தலை மட்டும் மேற்கொண்டிருந்த செயல்பாட்டையும் முழுமையாகப் பின்பற்றுவதில்லை இவ்விரண்டு முறைக்கும் இடைப்பட்ட முறைதான் சமரசமுறை.
- ❖ சாத்வீக முறை இம்முறையில் பயன்படுத்தகிறது.

kavin's 8438487951

## Group and Individual

### குழு மற்றும் தனி நபர் அறிவுரை பகர்தல்

**1. தனிநபர் அறிவுரை பகர்தல்:**

- அறிவுரை கேட்க வரும் தனிப்பட்ட நபருக்கு தனியொரு வல்லுநர் (அறிவுரை அளிப்பவர்) அறிவுரை பகர்வது தனிநபர் அறிவுரை பகர்தலாகும்.
- நேர்காணல் யுத்தியை கொண்டு அறிவுரை பகர்தல் நடைபெறுகிறது.
- தனிநபர் அறிவுரை பகர்தலில் அறிவுரை அளிப்பவருக்கும், அறிவுரை பெறுபவருக்கும் இடையே நிகழும் நேரடி உறவு முறையாகும்.
- தங்களது பிரச்சனைகளை மையமாகக் கொண்டு இருவருக்கும் இடையே இடைவினை மாற்றம் நிகழும்.
- பிரச்சனைக்குரிய காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்குரிய தீர்வினை கண்டறிய முயல்வர். அறிவுரை பகர்தலில் பெரும்பாலும் தனி நபர் அறிவுரை பகர்தலே நடைபெறும்.
- தனிநபர் அறிவுரை பகர்தலானது கல்வி, தொழில் சம்பந்தமான, மனவெழுச்சி அல்லது தனது சொந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண அளிக்கப்படுகிறது.
- அறிவுரை பகர்வர், அறிவுரை பெறுபவரின் பிரச்சனைகளைக் கண்டறிந்து, போதுமான விவரங்களை அறிவுரை பெறுபவரிடமிருந்து கேட்டறிந்து, பிரச்சனையை அறிவியல் முறைப்படி அணுக விழைவார்.
- அறிவுரை பெறுபவரின் திறமைகள், தன்னம்பிக்கை, விடா முயற்சியை மனதில் கொண்டு அவரின் பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தீர்வு காண இது பயன்படுகிறது.
- அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவரை உற்றுநோக்கி எவ்வாறு தனது பிச்சனையைப் புரிந்து கொள்கின்றனர். எவ்வாறு தீர்வு காண விழைகின்றனர், எவ்வாறு பகுத்தாரய்கின்றனர் எனவும் தேவைப்படின் கேள்விகள் கேட்டும், போதுமான செய்திகளை வழங்கியும் பிரச்சனைக்கு தீர்வு காண உதவி செய்கின்றனர்.
- தனி நபர் அறிவுரை பகர்தலானது பிரச்சனைகளின் தன்மையை பொறுத்து எளிதாகவோ அல்லது கடினமானதாகவோ இருக்கலாம்.
- பிரச்சனைக்கு ஏற்றப்படி தீர்வுகாண அறிவுரை பகர, அறிவுரை பகர்பவர் திறன்மிக்கவராக மனித உளவியலை பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

**2. குழு அறிவுரை பகர்தல்:**

- நான்கு முதல் ஆறு பேர் கொண்ட சிறு குழுவினர் தங்களது பொதுப்பிரச்சனைகளை பற்றி விவாதித்து ஆற்றுப்படுத்திக்கொள்ளும் செயல்பாடுகள் “குழுவாக” அறிவுரை பகர்தல் எனப்படும்.

kavin's 8438487951

- ❖ குழு அறிவுரை பகர்தல் மாணவர்களுக்கு புதிய வழிமுறையாகும்.
- ❖ சில சமயங்களில் தனிநபர் வழிகாட்டுதலில் சரியாக பதில் அளிக்காத மாணவர்களிடையே குழு அறிவுரை பகர்தலில் நடைபெறும் கலந்துரையாடல் மற்றும் பிற மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை விவாதிக்கும் போது தங்கள் சொந்த பிரச்சனைகளைத் தாங்களாகவே புரிந்து கொள்ளவும் துணை செய்கிறது.
- ❖ முன்னர் ஏற்றுக்கொள்ள முடியாது என கண்டறிந்த கருத்துக்களை மற்றும் மதிப்புகளை மேலும் புரிந்து கொள்ளத்தக்கதாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் குழு அறிவுரைபகர்தல் மாற்றுகிறது.
- ❖ குழு அறிவுரைபகர்தல் மாணவர்களின் கனவு, ஆசை, இலட்சியம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றை சுமூகமாக மாற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமூக சூழ்நிலையில் பிறருக்கு உதவும் வகையில் மாற்றிக் கொள்ள ஊக்குவிக்கிறது.

**குழு அறிவுரை பகர்தலுக்கான தேவைகள்:**

1. தனி நபர் பேட்டி
2. குழுவழிகாட்டல் அறையின் உட்புற தேவைக்கான ஏற்பாடுகள்.
3. ஒத்த இயல்பு கொண்ட குழு
4. குழுவில் இடம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை.

   - நடமாடும் அறிவுரை பகர்தல் மையம் சென்னை, கோவை, வேலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ஆகிய 10 மாவட்டங்களில் 2.01 கோடி ரூபாய் செலவில் அமையப்பட்டுள்ளது.

**கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலில் நாட்டச் சோதனையின் முக்கியத்துவம்:**

**(Importance of Aptitude test in Academic and Vocational guidance)**

- ❖ நாட்டச் சோதனைகள் பணியாளர்களை ஒரு குறிப்பிட்ட வேலைக்கு தேர்ந்தெடுக்க உதவுகின்றன.
- ❖ நாட்டச் சோதனைகள் ஒருவருக்கு தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது.
- ❖ பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான நாட்டச் சோதனைகளின் உதவியை நிர்வாகிகள் நாடலாம்.
- ❖ உண்மையில் நாட்டச் சோதனைகள் எதிர்கால வெற்றியை நிர்ணயிப்பதைவிட நிகழ்கால அடைவுகளை மட்டுமே அளவிடுகின்றன.
- ❖ ஒருவரின் தொழிலில் ஏற்படும் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக விளங்குவது நாட்டத்திறன்கள் மட்டுமே. நுண்ணறிவு போன்ற காரணங்கள் இருந்தாலும் நாட்டத்திறன்களே முதன்மையானவை.



kavin 8438487951

- ❖ மாணவர்களின் திறமைகள், திறன்கள் அடிப்படையில் கற்றல் சார் துணை செயல்பாடுகளை தேர்ந்தெடுக்க உதவுகிறது.
- ❖ கல்விக்கும், வேலைவாய்ப்பிற்கும் உள்ள முரண்பாட்டை குறைக்க உதவுகிறது.
- ❖ குறிப்பிட்ட உயர்கல்வியை தேர்ந்தெடுக்கவும், குறிப்பிட்ட தொழில் (அ) தொழிற்பயிற்சியை தேர்ந்தெடுக்க, ஆராய்ச்சி புரிய நாட்டச் சோதனை பயன்படுகிறது.

**தொழில் தேர்வு கோட்பாடுகள்**

1.கின்ஸ்பர்க்கின் தொழில் தெரிவுக் கொள்கை

2. சூப்பரின் தொழில் தெரிவுக் கொள்கை

3. ஹாலண்தின் தொழில் தெரிவு உளவியல் கொள்கை

4. ஹவிஹர்ஸ்ட்டின் தொழில் தெரிவு கொள்கை

5. அமைப்புக் கொள்கை

## மனநலம் (Mental Health)

மனநலம் என்பது தனக்கும், பிறருக்கும் பயனும், மகிழ்ச்சியும் தருகின்ற வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருத்தப்பாட்டுடன் திகழ்வதைக் குறிக்கின்றது.

ஹேட்பீல்டு கூற்றுப்படி மனநலம் என்பது ஒருவனது ஆளுமையின் நிறைவான இசைவான செயற்பாட்டைக் குறிப்பதாகும். மனநலமுள்ள நிலை என்பது, ஒருவன் தனக்கும், சமூகத்திற்கும் நிறைவைத் தருகின்ற வகையில் செயல்படுவதைக் குறிக்கின்றது.

**மனநலவியல்: பொருள்**

மனநலவியல் என்பது ஓர் அறிவியலே, மனநோய்களைத் தடுத்தல் மனநலனைப் பாதுகாத்தல், மனநோய்களைக் குணமாக்குதல் ஆகிய மூன்று முக்கிய கருத்துக்களைக் கொண்டதே மனநலவியல் ஆகும்.

**மனநலவியல் இலக்கு:**

1. மன நோய்களைத் தடுத்தல்
2. மனநலமனைப் பாதுகாத்தல்
3. மனநோய்களைக் குணப்படுத்துதல்

- ❖ மனநோய்த் தடுக்க ஒரு உளவியலாளர் என்ன செய்ய வேண்டும் என கூறியவர் ஜெரால்டு கெலான்.

kavin's 8438487951

**மனநோய் பிரிவுகள்:**

1. மருத்துவ உளவியல் நிலையைச் சார்ந்தது.
2. சமூக உளவியல் தன்மையைச் சார்ந்தது.

- ❖ மனநோயாளி பிறழ்வு நடத்தையை பெற்றிருப்பான் அவனை அசாதாரண மனிதன் என அழைக்கிறோம்.
- ❖ குறைபாடுள்ள மனநலம் பெற்றிருப்பவர்கள் குறைபாடுள்ள ஆளுமை கொண்டிருப்பவர்கள் (அ) நியுரோசிஸ் (அ) சைக்கோசிஸ்.
- ❖ மனநோயை ஹிப்னாடிசம் மூலம் குணப்படுத்தலாம் - பிராய்டு.

**மனநோய்கள்:**

1. தொடக்க நிலை மன நோய்கள் (நரம்பு தளர்ச்சி நோய்கள் - psycho-neuroses)
2. தீவிர உளத்தடுமாற்ற நோய்கள் (psychoses)
3. உளா – உடல் நோய்கள் (psycho-somatic disorders)
4. ஆளுமை கோளாறு நோய்கள் (personality Disorder)

**உதாரணங்கள்:**

**தொடக்க நிலை மன நோய்கள்:**

- பீதி நோய்கள் (phobhic neurosis,Anxiety neurosis)
- வலிப்பு நோய்கள் (Hysteric Neurosis)
- கற்பனை பிணி ஈடுபாடு (Hypochochondria)

**தீவிர உளத்தடுமாற்ற நோய்கள்:**

- உணர்ச்சி விண்டநிலை
- மேனிக்டிப்சிவ் சைகோசிஸ் (manic depressive psychosis)

**ஆளுமை கோளாறு நோய்கள்:**

- பாலுணர்வு முரண்பாடு (sexual deviant)
- மது போதைக்கு அடிமையாதல் (addiction)

kavin's 8438487951

**மனநோய்க்கான காரணங்கள்:**

1. **முற்சார்பு காரணிகள்:**

    - தப்பான வளர்ச்சி: மனநோய்க்கு செழிப்பான தளத்தை தயார்படுத்தும்.
    - தனிப்பட்ட வளர்ச்சி: வளர்ச்சி குறைந்த நரம்பு மண்டலம், மனமுதிர்ச்சி இன்மை, தவறான கற்றல்.
    - உருத்திரிந்த வளர்ச்சி –பொருத்தமில்லாத உடலமைப்பு

-எளிதில் வடுப்படும் நிலை

2.**திடீரென தோன்றும் தூண்டுதல்கள்:**

- கடுமையான மனவழுத்தம்
- நோய்நிலை கொண்டு ஆட்சி செலுத்த உதவும்
- உடல் சார்ந்த மன அழுத்தங்கள் (விபத்து, நோய் மூளை இயக்க பாதிப்பு)
- உணர்ச்சி சார் திரட்டல்
- உளம் சார்ந்த மன அழுத்தங்கள் (ஏமாற்றம் இழப்பு குறைபாடுகள் குற்ற உணர்வு அர்த்தமற்ற உறவுகள் போட்டி படிப்பு வேலை திருமணம் பாலுணர்வு ஆசைகள் பல விதமான மனப்போரட்டங்கள் அடங்கும்.
- சமூக கலாச்சாரம் சா்ந்த மன அழுத்தங்கள் (சமூக புறக்கணிப்பு, குடும்ப பிரச்சனை, வேலை இழப்பு)
- மன நோயாளி என்பவன் ஒரு அசாதாரண மனிதன் பிறழ்வு நடத்தை உடையவன

.

**மன நோய்க்கான சோதனை முறைகள்:**

- நேர்காணல்
- உளவியல சோதனைகள்
- நுண்ணறிவு சோதனைகள்
- ஆளுமை சோதனைகள்

kavin's 8438487951

**உடலியல் சோதனைகள்:**

1.இரத்த பரிசோதனைகள்

2.மூளை படங்கள் **(CT,MRI,PET)**

**நேரடி உற்று நோக்கல் சோதனைகள்**

**மனமுறிவு:**

மனமுறிவு என்பது ஒரு செயலை செய்யவிடாமல் தடுப்பதாகும். ஊக்கிகளால் ஏற்படுகின்ற திருப்தியை தடைசெய்யும் பொழுதோ அல்லது தாமதப்படுத்தும் பொழுதோ மனமகிழ்ச்சியற்ற நிலை உண்டாகின்றது. இத்தகைய நிலையே மனமுறிவு எனப்படும்.

**மனமுறிவிற்கான காரணங்கள்:**

1. வலுப்படுத்தலை நிறுத்துதல்
2. தாமதித்தலால் ஏற்படும் மனமுறிவு
3. தடைப்படுத்தல்.

   உடல், சமூக, பொருளாதார, கற்றல், தடைகள்
4. மனப்போராட்டம்

   மனநலச் சீர்கேடுகளினால் ஏற்படும் தடைகள்.

**மனப்போராட்டம்: (அ) முரண்பாடு (Mental Conflicts)**

- ஒரு குறிக்கோளை அடைய முடியாமல் தடுக்கப்படும் நடத்தைக்கு முரண்பாடு என்று பெயர். இது ஒரு இயற்கைத் தத்துவம்.
- ஒருவனது மனம் சரியான முடிவெடுக்கும் நிலையில் இல்லாத போது மனமகிழ்ச்சியற்ற நிலையையும், துயரமும் ஏற்படுகிறது இந்நிலை தனிப்பட்ட ஒருவனின் செயலை தடுத்து நிறுத்தி விடும்.

**மனப்போராட்டத்தின் வகைகள்:**

1. அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டம் (நேர் - நேர் ஊக்கிகள்)
2. அணுகுதல் - விலகுதல் மனப்போராட்டம் (நேர் - எதிர் ஊக்கிகள்)
3. விலகுதல் - விலகுதல் மனப்போராட்டம் (எதிர் - எதிர் ஊக்கிகள்)

kavin's 8438487951

**1. அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டம்:**

இந்த வகை மனப்போராட்டமானது இரண்டு வெவ்வேறு விரும்பத்தக்க மற்றும் கவரக்கூடிய இலக்குகளிடமிருந்து தெளிவான தீர்வுகாண இயலாமை

(எ.கா)

- ஒரு மாணவன் பள்ளியுடனோ (அ) குடும்பத்திடனோ சுற்றுலா செல்லக்கூடிய சூழ்நிலையில் மனக்குழப்பம்.
- இரண்டு அழகிய பெண்களில் யாரைத் திருமணம் செய்து கொள்வது என்று தேர்ந்தெடுப்பதில் மனக்குழப்பம்.

**2. விலகுதல் - விலகுதல் மனப்போராட்டம்:**

இந்த வகை மனப்போராட்டமானது இரண்டு விரும்பப்படாத மற்றும் அச்சுறுத்தலை தரக்கூடிய இலக்குகளிடத்துத் தெளிவான தீர்வுகாண இயலாமை.

(எ.கா).கணிதத் தேர்வினை எழுத இயலாமை, அதே சமயம் ஆசிரியரின் தண்டனையை விரும்பாமை.

1. படிப்பதில் விருப்பமின்மை, அதே சமயம் கிரிக்கெட் போட்டி பார்ப்பதிலும் விருப்பமின்மை.

**3. அணுகுதல் - விலகுதல் மனப்போராட்டம்:**

இவ்வகையான முரண்பாடானது, ஒரு இலக்கும், ஒரு சமயத்தில் கவரக்கூடிய வகையிலும் மற்றொரு சமயத்தில் அதே இலக்கு அச்சுறுத்தலைத் தரக்கூடிய வகையிலும் அமையப் பெற்ற தெளிவான தீர்வுகான இயலாமை.

(எ.கா) ஒரு மாணவனுக்கு இன்றைய கல்வி முறையின் மீது வெறுப்பும் அதே சமயம் அதன்மீது நாட்டம் கொண்டு படித்தல் என்ற முரண்பாட்டுடன் இருத்தல்.

**மனக்குழப்பம்:**

அமைதியை குலைக்கக்கூடிய ஒரு நிலையே மனக்குழப்பம் ஆகும்

**காரணங்கள்:.**

- மனமுறிவும், மனப்போராட்டமும்
- ஏழ்மை நிலை
- வேலை இல்லாத்திண்டாட்டம்
- மதிப்பு குறைதல்
- கல்விக்குறைபாடுகள்

kavin's 8438487951

- ஆசிரியர் உறவில் மாற்றம்.
- அரசியல் குறுக்கடுகள் நிர்வாகம்
- இன வேறுபாடுகள்..

## தற்காப்பு நடத்தைகள் (Defence Mechanisms)

**பொருள்:** உலகில் உள்ள அனைவருக்கும் மனக்கவலை, பயம், மனப்போராட்டம் போன்றவை ஏற்படும். அது போன்ற சமயங்களில் அதன் தன்மையைக் குறைக்கவும், நீக்கவும் நம்மை அறியாமலே அந்த சூழ்நிலையில் வெளிப்படுத்தும் நடத்தைகள் தற்காப்பு நடத்தைகள் எனப்படும்.

- தற்காப்பு நடத்தைகளை பொருத்தப்பாடற்ற நடத்தை எனவும் அழைக்கலாம்.

**பண்புகள்:**

- மனமுறிவும், மனப்போராட்டமும் தவிர்க்க உதவும் உத்திகள்.
- கவலை அவமானம் குற்ற உணர்ச்சிகளிலிருந்து பாதுகாக்கிறது.
- மன நோயாளியாக மாறுவதிலிருந்து பாதுகாக்கும்.
- சுய கௌரவம் பாதிக்கப்படாமல் காக்கும்.

kavin's 8438487951

| | |
|---|---|
| **1) அகநோக்குடைமை (Introversion)** | சில குழந்தைகள் எப்பொழுதுமே தனித்திருக்க விரும்புவார்கள். வகுப்பறையில் சில குழந்தைகள் தனிமைப்படுத்தப்பட்டு காணப்படுவர். அகநோக்குடைமை தீவரம் அடையும் போது சமூக விரோதிகளாக மாறக்கூடும். |
| **2) பகற்கணவு காணுதல்:** | நிறைவேறாத ஆசைகள், இச்சைகள் கற்பனை மூலம் வெளிப்படுத்துதல், அதாவது பகற்கனவு காணுதல் எனப்படும்.<br>• ex: வாய் திக்கிப் பேசுபவன், பேச்சுப்பொட்டியில் முதல் பரிசை பெறுவது போல் கனவு காணுதல்.<br>• வெற்றி கொண்ட வரன் போல (அ) துன்பம் ஏற்கும் தியாகி போல. |
| **3) புறத்தெறிதல்:** | தனது தோல்விகளையும், குறைபாடுகளையும் அடுத்தவர் மீது ஏற்றிக் கூறுதலே புறத்தெறிதல் ஆகும்.<br>• Ex: காலந்தாமதமாக வரும் மாணவன், எல்லோரும் தானே காலந்தாமதமாக வருகிறார்கள் எனக் கூறுதல், பெரோனையா என்ற மனநோயுள்ளவர்களிடம் புறத்தெறிதல் என்ற பொருத்தப்பாடற்ற நடத்தை தீவிரமாக இருக்கும். |

| | |
|---|---|
| | • தந்தை தான் பெறாத கல்வியை தன்மகன் விரும்பாவிட்டாலும் அவனை கட்டாயப்படுத்துவது. |
| **4) காரணம் கற்பித்தல்:** | தனது தவறுகளுக்கும் இயலாமைக்கும் உரிய உண்மைக் காரணத்தை தவிர்த்து, சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளக்கூடிய பொருத்தமானக் காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்து கூறுதலே "காரணம் கற்பித்தலாகும்"<br>❖ நரி மற்றும் திராட்சைப்பழம் கதை – சீ….. சீ.. இந்தப்பழம் புளிக்கும் (Sour Grapism)<br>❖ Sweet Grapism (தற்போதைய நிலையே சிறந்தது) தகுந்த காரணம் கூறுதல்.<br>Ex: கணிதத் தேர்வில் தோல்வியுற்று ஒருவன், அன்று தேர்வறையில் மின்சாரம் தடைப்பட்டு, இருட்டாக இருந்ததால் தான் தேர்வைச் சரிவர எழுதி, தேர்ச்சி பெற முடியவில்லை என்று கூறுவது. |
| **5) ஈடு செய்தல்:** | ஈடு செய்தலுக்கு அடிப்படைகள் காரணம் தாழ்வுணர்ச்சியேயாகும்.<br>❖ தன்னிடம் காணப்படும் ஒரு குறைப்பாட்டிற்கு ஈடு செய்யும் வகையில் தன் சக்தி முழுவதையும் வேறொரு செயலில் செலவிட்டு வெற்றி பெறுதலாகும்.<br>* Ex: கணிதத்தில் பின் தங்கிய மாணவர் ஒருவர், அதை ஈடுகட்டும் வகையில் தன் சக்தி முழுவதையும் தமிழ் பாடத்தில் செலவிட்டு வெற்றி பெறுதலாகும்.<br>❖ படிப்பில் பின்தங்குபவன் விளையாட்டில் ஆர்வம் காட்டுதல். |
| **6) இடமாற்றம்:** | ஒரு நபரிடமோ, ஒரு பொருளின் மீதோ வெறுப்பு கொள்ளும் ஒருவர் அவ்வெறுப்பினை நேரடியாக வெளிப்படுத்த இயலாமல், பிறர்மீதோ (அ) வேறொரு பொருளின் மீதோ வெறுப்பினைக் காட்டுதலாகும்.<br>Ex: 1) தன் மனைவி மீது கோபம் உள்ள ஆசிரியர் வகுப்பறையில் மாணவன் மீது தன் கோபத்தை காட்டுதல்.<br>2) பலிகடா ஆக்கப்படுதல். |
| **7) பின்னடைதல்:** | ஒரு பிரச்சனையை முதிர்ச்சியடைந்தோர் போல அணுக தெரியாமல் குழந்தைத்தனமாக எதிர்நோக்குதல் பின்னடைதல் ஆகும்.<br>Ex: வீட்டை விட்டு வெளியேறிவிடுவேன் என குழந்தைத்தனமாக வயது வந்தவர்கள் வெளிப்படுத்துதல்.<br>❖ சிறுபிள்ளைகள் போல் அடம் பிடித்தல் (Schizophrenia நோயுற்றவர்கள்) |
| **8) மடை மாற்றம்:** | இயல்பூக்கத்தின் வழியாக ஏற்படும் மனவெழுச்சிகளையும், ஊக்கிகளையும் சமூகத்தார் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உயர் ஊக்கிகளாக மாற்றுதலே மடை மாற்றம்.<br>ஆல்போர்டின் கூற்றுப்படி "மடை மாற்றம்" ஒருவனிடத்தில் உள்ள சமூக எதிருணர்வு மனவெழுச்சிகளை, சமூகம் ஏற்படும் நல்வழியில் திருப்பி, தூய்மைப்படுத்தும் பண்பைப் கொண்டது. |

kavin's 8438487951

| | |
|---|---|
| | Ex: அழகற்ற உடலமைப்பைக் கொண்ட ஒரு பெண் திருமணம் ஆகாமல் இருக்கும் போது சமூக சேவை செய்வது. |
| **9) பின் வாங்குதல்:** | தோல்வியை உண்டு பண்ணும் சூழலிருந்து ஒருவன் விலகிச் செல்லும் முறையை பின் வாங்கல் என்கிறோம். Ex: தேர்வுக்கு சரிவர படிக்காத மாணவர், உடல்நிலை சரியில்லை எனக்கூறி தேர்வுக்கு வராமல் இருத்தல். |
| **10) ஒன்றுதல் (எ) இனம் காணுதல்:** | நம்மால் செய்யமுடியாத ஒரு செயலை வேறொருவர் செய்வதை ரசித்தல் மூலம் ஓரளவு மனநிறைவு பெறுவதே ஒன்றுதலாகும். Ex: 1) நான் பரிசு பெறாவிட்டாலும் எனது நண்பன் ஓட்டப்பந்தயத்தில் பரிசு பெற்றுள்ளான் என மகிழ்தல். 2) வீர வணக்க மனப்பான்மை. |
| **11) நசுக்குதல்:** | வலியை கொடுக்கும் அனுபவம், நினைவுகள், எண்ணங்கள் யாவும், நினைவு மன நிலையிலிருந்து நனவிலி மனநிலைக்குத் தள்ளப்பட்டு மீண்டும் மேல் மனதிற்கு வராதபடி தவிர்த்தலாகும். இது முழுமையான மறதியை தோற்றுவிக்கும். (எ.கா) விபத்தில் நினைவிழந்தது போல் அதனை மறத்தல். |

### வழிகாட்டுதலும் அறிவுரை பகர்தலும்

1. ‘Guidance in School” என்ற நூலை எழுதியவர்.

அ) கார்ஸ் ரோஜர்ஸ் **ஆ) பட்நகர்** இ) தார்ன் ஈ) எவருமில்லை.

2. மன நோயை ஹிப்னாடிசம் மூலம் குணப்படுத்தலாம் என்றவர்

அ) ஜெரால்டு ஆ) ஹெலன் கெல்லர் **இ) ∴ப்ராய்டு**

ஈ) சாண்டவ்.

3. மறைமுக அறிவுரை பகர்தல் (அ) நெறிசாரா அறிவுரை பகர்தல் என்பதை முதன்முதலில் வழக்கத்திற்கு கொண்டு வந்த அறிஞர்.

அ) சிக்மெண்ட் ப்ராய்டு ஆ) E.G. வில்லியம்சன் **இ) காரல்ரோஜர்ஸ்**

ஈ) ரோர்ஹாக்.

4. நேரடி அறிவுரை பகர்தல் திறம் வாய்ந்த மனவிலயறிஞர்.

அ) வைகெட்ஸ்கீ ஆ) தார்ன் இ) ரோஜர்ஸ்

**ஈ) வில்லியம்சன்**



kavin's 8438487951

5. தற்காப்பு நடத்தையில் பலிக்காட ஆக்குதல் என்பது பின்வருவனற்றில் உதாரணமாகும்.

அ) இடமாற்றம் **ஆ) புறத்தெறிதல்** இ) பின்வாங்குதல் ஈ) அடக்குதல்.

6. சமரச முறை அறிவுரை பகர்தல் முறையை அறிமுகம் செய்தவர்.

**அ) காரல்ரோஜர்ஸ்** ஆ) ஹோய்ட் இ) ஜே. ஜோன்ஸ்

ஈ) எம்.சி. தாரன்

7. மனப்போராட்டத்தில் இரு நேர் ஊக்கிள் இருப்பது எதில்?

**அ) அணுகுதல் - அணுகுதல்** ஆ) விலகுதல் - விலகுதல்

இ) அணுகுதல் - விலகுதல் ஈ) மேற்கூரிய அனைத்தும்.

8. சர்க்கரை நோயாளிக்கு இனிப்பை எடுக்க ஆசை, சாப்பிட்டால் சர்க்கரை நோய் குறித்த பயம் என தவிர்ப்பது இது மனப்போராட்டத்தில் எந்த வகை?

அ) அணுகுதல் - அணுகுதல் **ஆ) அணுகுதல் - விலகுதல்**

இ) விலகுதல் - விலகுதல் ஈ) மேற்கூறிய அனைத்தும்.

9. தனது திறமையுடன் தன்னம்பிக்கையின்மையானது காலில் பிரச்சனையால் விளையாட்டில் கலந்து கொள்ளவில்லை என்று ராதா கூறுவது இது எந்த வகை தற்காப்பு நடத்தையாகும்?

அ) காரணம் காட்டுதல் ஆ) புறத்தெறிதல் **இ) விலகுதல்** ஈ) பின்னடைதல்

10. பிச்சனைக்குரியவரே தனது பிரச்சனைக்கு தீர்வினை எடுப்பது.

அ) நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல் ஆ) தன்னெறிப்படுத்தும் அறிவுரை பகர்தல்

**இ) சமரச அறிவுரை பகர்தல்** ஈ) அனைத்தும்.

11. நெறிபிறழ் மாணவனை திருத்துவதற்கேற்ற முறை

அ) தண்டணை ஆ) பரிசு இ) கண்டுகொள்ளாத நிலை

**ஈ) அறிவுரை பகர்தல்.**

12. உளவியல் நாடகங்களில் தன்னையும் அறியாமல் வெளிப்படுத்துவது

**அ) தனது மனப்போராட்டங்களை வெளிப்படுத்துவது.**

ஆ) தனது சந்தோஷங்களை வெளிப்படுத்துவது.

இ) தனது வருத்தங்களை வெளிப்படுத்துவது.

ஈ) அனைத்தும்.

kavin's 8438487951

13. தனது கணவரை திட்டுவதற்கு பதிலாக, பாத்திரத்தை மிதிப்பது, குழந்தைகளை அடிப்பது என்பது தற்காப்பு நடத்தையில் எந்த வகை?

அ) விலகுதல் ஆ) காரணம் கற்பித்தல் **இ) இடமாற்றம்**

ஈ) புறத்தெறிதல்.

14. மனப்போராட்டங்களின் வகைகள் எத்தனை?

அ) 4 **ஆ) 3** இ) 2 ஈ) 5

15. வழிகாட்டலோடு தொடர்புடையவர்

அ) நியூஸம் ஆ) ஹாய்ட் இ) டால்பெர்ட் **ஈ) ரேப்பர்ட்**

16. ஷிஷோப்ரினியா என்ன வகையான நடத்தை

அ) ஒன்றுதல் ஆ) காரணம் கற்பித்தல் **இ) பின்னோக்கம்.**

ஈ) பலிகடா ஆக்கப்படுத்தல்.

17. மனித நேய உளவியல் அறிஞர்

**அ) காரல் ரோஜர்ஸ்** ஆ) யூங் இ) டிட்சனர் ஈ) பெட்சனர்

18. ……… வழிக்காட்டல் என்பது பிறருக்கு உதவி செய்வது எனக்கூறியவர்

அ) ஆண்டர்சன் ஆ) ே ஹாய்ட் இ) ஹோலிஸ் & ஹோலில்

**ஈ) டிரக்ஸ்லர்**

19. F.C தாரன் எதனுடன் தொடர்புடையவர்.

அ) அறிதிறன் ஆ) கற்பனை இ) வழிகாட்டல்

**ஈ) அறிவுரை பகர்தல்**

20. விலகுதல் - விலகுதல் மனப் போராட்டத்தில் செயல்படும் ஊக்கிகள்

**அ) இரு வெவ்வேறு எதிர் ஊக்கிகள்**

ஆ) ஒரு நேர் மற்றும் அதே எதிர் ஊக்கிகள்

இ) ஒரு நேர் மற்றும் அதே எதிர் ஊக்கிகள்

ஈ) நேர் மற்றும் எதிர் ஊக்கிகள்

kavin's 8438487951

21. மனநலவியலின் இலக்கு என்ன?

**அ) மனநலம்** ஆ) ஆளுமை இ) பொருத்தப்பாடு

ஈ) ஒருமைப்பாடுடைய ஆளுமை.

22. தொழில் வழிகாட்டலின் தந்தை எனப்படுபவர் ……………

அ) குரோ & குரோ ஆ) டிரக்ஸ்லர் **இ) ஸ்பியர்சன்** ஈ) பார்சன்

23. தற்காப்பு நடத்தையை அடிக்கடி மேற்கொண்டால் ஏற்படுவது.

**அ) மனமுறிவு** ஆ) மனநோய் இ) மன இறுக்கம்

ஈ) மனப்போராட்டம்.

24. ஒரு நரி திராட்சைப் பழங்களை அடையாது போது ச்சீ, ச்சீ, இந்தப் பழம் புளிக்கும் என்று கூறுவது எத்தகைய தற்காப்பு நடத்தை?

**அ) காரணம் காட்டுதல்** ஆ) பின்வாங்குதல் இ) நிலைமாற்றம்

ஈ) புறத்தெறிதல்.

25. ஒருவர் தம் குறைகளை பிறர்மீது சுமத்தும் தற்காப்பு நடவடிக்கை.

அ) காரணம் கற்பித்தல் ஆ) அடக்குதல் **இ) புறத்தெறிதல்**

ஈ) வினை வருதல்.

26. ஓவியம் வரை கஷ்டப்படுகிறவன் ஓவியப் போட்டிகளில் முதல்பரிசு பெறுவது போல நினைப்பது?

**அ) பகற்கனவு காணுதல்** ஆ) புறத்தெறிதல் இ) காரணம் கூறுதல்

ஈ) ஈடுசெய்தல்.

27. மாணவர்கள் விருப்பம் தொழிற்கேற்ப பாடப்பிரிவை (அ) தொழில் படிப்பிற்கு வழிகாட்டுவது கீழ்க்கண்ட எவற்றை சாரும்.

அ) தனி நபர் வழிகாட்டல் ஆ) தொழில் வழிகாட்டல் **இ) கல்வி வழிகாட்டல்**

ஈ) குழு வழிகாட்டல்.

kavin's 8438487951

28. பொறியாளர் மற்றும் மருத்துவ நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்ற மாணவன் இரண்டில் எதை தேர்ந்தெடுப்பது என முடிவெடுப்பது.

**அ) அணுகுதல் - அணுகுதல் - மனப்போரட்டம்.**

ஆ) அணுகுதல் - விலகுதல் - மனப்பேராட்டம்.

இ) விலகுதல் - விலகுதல் - மனப்போராட்டம்.

ஈ) அனைத்தும்.

29. வழிகாட்டுதலின் கொள்கைகள் என்ற நூலை எழுதியவர் ……………..

அ) ஸ்கின்னர் ஆ) பாவ்லவ் **இ) ஆர்தர் J ஜேம்ஸ்** ஈ) கார்ல்ரோஜர்ஸ்

30. ____________ என்பவரின் கூற்றுப்படி, மறைமுக அறிவுரை பகர்தல் என்பது அறிவுரை பெறுபவரை அவர் தன்னைப்பற்றி புரிந்து கொள்ள அனுமதிக்க வேண்டும் இந்த முறை அறிவுரை பெறுபவருரை மையமாகக் கொண்டு செயல்படுகிறது.

**அ) ஆர்பெக்கின்** ஆ) E.G. வில்லியம்சன் இ) தாரன்

ஈ) W.C. வில்லியம்சன்.

31. வீரவணக்கம் மனப்பான்மை என்பது?

அ) ஈடு செய்தல் **ஆ) ஒன்றுதல்** இ) பின்னோக்கம் ஈ) இடமாற்றம்

32. அழகற்ற பெண் அதை ஈடுகட்டும் வகையில் படிப்பில் முழுமூச்சுடன் ஈடுபட்டு முதல் மாணவியாக திகழ்வது.

அ) மடைமாற்றம் ஆ) பின்வாங்குதல் இ) அடக்குதல் **ஈ) ஈடுசெய்தல்.**

33. பெரோனையா என்ற மனநோயுள்ளவர்களிடம் ________________ என்ற பொருத்தப்பாடற்ற நடத்தை மிகத் தீவிரமாகக் காணப்படும்.

**அ) புறத்தெறிதல்** ஆ) காரணம் கற்பித்தல் இ) பகற்கனவு காணுதல்

ஈ) ஒன்றுதல்.

34. மாணவர் அறிவுரை பகர்தலில் பயிற்சிகளும் பண்புகளும் என்ற நூலை எழுதியவர்

**அ) R.B. ராபின்சன்** ஆ) சிம்சன் இ) வில்லியம்சன் ஈ) தார்ண்டைக்

35. சுமூகமான நட்புறவு வளர்வதற்கான வழிமுறைகளை தந்தவர்

**அ) ராபின்சன் மற்றும் டேவிஸ்**

ஆ) ராபின்சன் மற்றும் ரோஜாஸ்

kavin's 8438487951

இ) ராபின்சன் மற்றும் வில்லியம்சன்

ஈ) ராபின்சன் மற்றும் தார்ன்

36. அறிவுரை பகர்தல் எப்பொழுது தேவைப்படுகிறது என்ற வழிமுறைகளை குறிப்பிட்டவர்.

**அ) செல்வி பிராக்தன்**

ஆ) செல்வி மார்ட்டின்

இ) செல்வி ஜுட்

ஈ) செல்வி ராட்சன்.

37. வழிகாட்டுதலின் இதயம்

**அ) அறிவுரை பகர்தல்** ஆ) தற்காப்பு நடத்தைகள்

இ) மறைமுக அறிவுரை பகர்தல் ஈ) உளவியல்

38. அறிவுரை பகர்தல் என்பது

**அ) உபதேசம் செய்வதல்ல** ஆ) உபதேசம் செய்வது

இ) விசாரணை செய்வது ஈ) வளர்ச்சியடையச்செய்தல்.

kavin's 8438487951

39. குழந்தை இல்லாதவர்கள் செல்லப்பிராணியை வளர்ப்பது.

அ) பின் வாங்குதல் **ஆ) மடைமாற்றம்** இ) இடமாற்றம்

ஈ) ஒன்றுதல்.

40. கீழ்க்கண்டவற்றில் அறிவுரை பகர்தலுக்கு எது பொருத்தமானது அல்ல?

அ) மருத்துவர் - நோயாளி ஆ) மருத்துவர் - மனநோயாளி

**இ) மருத்துவர் - போலீஸ்** ஈ) வக்கீல் - திருடன்

41. நெறிப்படுத்தும அறிவுரை பகர்தல் ____________யை மையமாகக்கொண்ட அறிவுரை பகர்தல் என்றும் கூறுவர்.

**அ) அறிவுரை பகர்பவர்** ஆ) அறிவுரை பெறுபவர்

இ) அறிவுரை பகர்பவர் மற்றும் பெறுபவர் ஈ) அனைத்தும்.

42. அறிவுரை பகர்தலின் இதயம்

அ) அறிவுரை பகர்பவர் ஆ) அறிவுரை பெறுபவர் இ) சூழ்நிலை

**ஈ) நேர்காணல்**

43.. நெறிப்படுத்தும் அறிவுரை பகர்தலில் E.G. வில்லியம்சன் கூறும் படிநிலைகள் எண்ணிக்கை

அ) 5 **ஆ) 6** இ) 3 ஈ) 4

44. சாத்வீக முறை பயன்படும் அறிவுரை பகர்தல் முறை

அ) நேரடி அறிவுரை பகர்தல்

ஆ) மறைமுக அறிவுரை பகர்தல்

**இ) சமரச முறை**

ஈ) இவற்றில் எதுவுமில்லை.

45. வழிகாட்டல் என்ற வார்த்தையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் …………….

அ) ஸ்பியர் மேன் **ஆ) பார்சன்ஸ்** இ) குரோகுரோ ஈ) எதுவுமில்லை.

46. 1941-ஆம் ஆண்டு _______ல் பாட்லிபாய் என்பவரால் தொழில் வழிகாட்டுதல் அலுவலகம் நிறுவப்பட்டது.

அ) மும்பை ஆ) சென்னை இ) டெல்லி **ஈ) கல்கத்தா**

47. வழிகாட்டலின் மையமாக செயல்படும் பகுதி

**அ) அறிவுரை பகர்தல்** ஆ) அறிவுரை பகர்தல் மையம்

இ) அறிவுரை பகர்பவரின் பிரச்சனை ஈ) அறிவுரை பகர்பவரின் நலம்.

48. வழிகாட்டல் என்பது ………… நிகழ்வாகும்

அ) முறைசார்ந்த ஆ) **முறைசாரா** இ) முறைசார்ந்த மற்றும் முறைசாரா

ஈ) எதுவுமில்லை.

49. வழிகாட்டலின் மைய பொருள்

அ) தனிநபர் பிரச்சனை **ஆ) தனிநபர் நலம்**

இ) தனிநபர் ஆலோசனை ஈ) தனி நபர் செயல்பாடு

kavin's 8438487951

50. --------ஒன்று தொழில் வழிகாட்டலில் முக்கியத்துவம் பெறுகிறது.

அ) நுண்ணறிவு ஆ) ஊக்கச்சோதனை **இ) நாட்டச்சோதனை** ஈ) ஆர்வசோதனை

51. கல்வி வழிகாட்டல் பற்றி வரையறைகள் கூறியவர்களில் மிகச் சிறந்தவர் யார்?

**அ) ஜோன்ஸ்** ஆ) சூப்பர் இ) ஹோக்பர் ஈ) அனிரோ

52. வழிகாட்டலில் தர அளவுகோல் எதை அளக்கப்படுகிறது?

அ) நுண்ணறிவு **ஆ) ஆளுமை** இ) நாட்டம் ஈ) ஆர்வம்.

53. "பள்ளி அறிவுரை பகர்பவர்" என்ற நூலை எழுதியவர்.

அ) E.C. ரோபர் **ஆ) தார்ன்** இ) ரோஜர்ஸ் ஈ) W.C.ரோபர்

54. 1947-ஆம் ஆண்டு பார்சி பஞ்சாயத்து நிதி அறக்கட்டளை, கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதலில் ஒரு பத்திரிக்கையை வெளியிடுவது.

**அ) பம்பாய்** ஆ) கொல்கத்தா இ) சென்னை ஈ) டெல்லி.

55. 1950-ம் ஆண்டு அரசு தொழில் வழிகாட்டும் அமைப்பு தோற்றுவித்த இடம்.

**அ) பம்பாய்** ஆ) டெல்லி இ) சென்னை ஈ) கொல்கத்தா

56. ___________ என்பவர் டெல்லி மேல்நிலைப்பள்ளிகளுக்கான வழிகாட்டல் திட்டம் ஒன்றை தயாரித்தவர்.

**அ) K.G. ராமாராவ்** ஆ) K.G. சுப்பாராவ் இ) சர்மா ஈ) லெனின்

57. மனநலவியல் என்ற சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர்.

அ) வில்லியம் ஜேம்ஸ் ஆ) வில்லியம் மக்டூகல்

**இ) வில்லியம் கானல்** ஈ) ராபர்ட்.

58. உலக மனநல நாள்

**அ) அக்டோபர் 10** ஆ) டிசம்பர் 10 இ) நவம்பர் 10 ஈ) ஜனவரி 10

59. அகில இந்திய கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1946 ஆ) 1958 இ) 1950 **ஈ) 1954**

60. வழிகாட்டலின் அடிப்படை விதிகளை அறிமுகப்படுத்தியவர் ………..

**அ) ஹோலிஸ் & ஹோலிஸ்** ஆ) டிரக்ஸ்லர் இ) குரோ & குரோ ஈ) E.G வில்லியம்சன்



kavin's 8438487951

# KAVIN'S EDUCATION STUDY MATERIALS

# TRB SCERT- DIET EXAM - 2016

kavin's 8438487951

## Unit – 9

## Guidance and counseling

**Full Study Material & Model Question Paper and Previous Year Question Paper**

**(2001 - 2015)**

**(PHYSICS SCERT-DIET MATERIAL IS ALSO AVAILABLE )**

**CONTACT : 8144189949, 8438487951**